# மாலைக்கதிர்

Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel



சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 18 வியாழக்கிழமை 01.05.2025 கதிர் 183

## யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம்







யாழ்ப்பாணம், மே 01

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.

கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தலைமையில்

7

# அநுர அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்க மக்களே அணிதிரளுங்கள்!

## மே தினக் கூட்டத்தில் சஜித் அறைகூவல்

தலவாக்கலை, மே 01

“எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து,

அரசுக்கு சிவப்பு எச்சரிக்கையை வழங்குவதற்கு மக்கள் அணிதிரள வேண்டும்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறைகூவல் விடுத்துள்ளார்.

தலவாக்கலையில் இன்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

7



## 40.7 ஏக்கர் காணிகள் விடுவிப்பு



யாழ்ப்பாணம், மே 01

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்து வந்த ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்காக இன்று ஒப்படைக்கப்பட்டன.

7

## யாழ்ப்பாணத்தில் இன்று கூட்டு மே தினப் பேரணி






யாழ்ப்பாணம், மே 01

தொழிற்சங்கங்கள், வெகுஜன மற்றும் சிவில் அமைப்புகளுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் இணைந்து நடத்திய கூட்டு மே தினப் பேரணி இன்று யாழ்ப்பாணத்தில்

7

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

## யாழ். போதனா பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பு





யாழ்ப்பாணம், மே 01

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இன்று வியாழக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தமக்குச் சம்பள உயர்வு கோரியும், தற்போது பிறிதொரு நிறுவனம்

7

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**



# இரத்தக்களரிகளை தடுக்க ஆதரவு கோரும் பொலிஸார்

கொழும்பு, மே .01

இலங்கையில் பாதாள உலக வன்முறைகள் கூர்மையாக அதிகரித்துள்ளதாகவும், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 38 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான சம்பவங்கள் மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலிருந்து பதிவாகியுள்ளன என்றும் அவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களால் பெருகிய மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகள் என வும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும், போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புகளுக்கு இடையே அதிகரித்து வரும் மோதல்கள் மற்றும் போட்டியானது, பாதாள உலகக் கும்பல்களின் இலக்கு வைத்து இடம்பெறும் தாக்குதல்கள் காரணமாகவே வன்முறை ஏற்பட்டதாக சட்ட அமுலாக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தக் குற்றச் செயல் வலையமைப்புகளை அகற்றவும் மேலும் இரத்தக்களரிகளைத் தடுக்கவும் பொலிஸ் தரப்பு முயற்சிகளை தற்போது முடுக்கி விட்டுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் வளர்ந்து வரும் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான சமூக ஒத்துழைப்பு மற்றும் சட்டமன்ற ஆதரவையும் அதிகாரிகள் கோரியுள்ளனர்.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன எனவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

### யாழ்.சிறுவிளான்–பெரியவிளான் இளவாலை

# ஸ்ரீ ஆனந்த சிரடி சாய்பாபா ஆலயம் மஹா குடமுழுக்கு பெருவிழா

நிகழும் மங்களகரமான விசுவாவசு ஆண்டு 11.0502025 ஞாயிற்றுக்கிழமை காலை 5.51 அணி முதல் 8.51 வரை நடைபெறும்.

07.05.2025 கிரியை ஆரம்பம்

10.05.2025 சந்தனக்காப்பு, பால்காப்பு- அடியார்களிக் கைகளால் வைக்கப்படும்.

11.05.2025 குடமுழுக்கு கலசம் ஊற்றுதல் இடம்பெறும்.

தொடர்ந்து 23.05.2025 விழா பூர்த்தி இடம்பெறும். மண்டாபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

ஆனந்த சீரடி அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டுஎம்பெருமான்ஆசியைப்பெறுமாறும் வேண்டுகின்றோம்.

ஓம் சாய் ராம்......

(ஐ)

# குறைத்தாலும் குறைக்கமாட்டோம்

கொழும்பு, மே .01

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அகில இலங்கை முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சங்கம் (யுஜவுறுனுரு), இந்த நேரத்தில் முச்சக்கர வண்டியின் போக்குவரத்து கட்டணங்களைக் குறைக்க முடியாது என்று கூறியது, ஏனெனில் இந்த முடிவை மேற்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணையம் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணையம் (NTC) எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.



மேற்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணையம் சமீபத்தில் மேற்கு மாகாணத்தில் முச்சக்கர வண்டி போக்குவரத்து கட்டணங்களை ஒழுங்குபடுத்த முடிவு செய்துள்ளதாக அகில இலங்கை முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி, அவர்கள் முச்சக்கர வண்டி போக்குவரத்துக்கான புதிய நிலையான கட்டணங்களை நிர்ணயித்தனர். முன்னதாக, முதல் கிலோமீட்டருக்கு ரூ. 100 மற்றும் கூடுதல் ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ரூ. 90 என கட்டணத்தை நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், இது ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை.

"எனவே, முச்சக்கர வண்டியின் போக்குவரத்து கட்டணங்களைக் குறைக்க நாங்கள் எந்த முடிவையும் எடுக்க முடியாது, ஏனெனில் அது மேற்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணையத்தின் பொறுப்பாகும்" என்று தர்மசேகர கூறினார். (ஐ)



# உறுதியுடன் ஒன்றிணைந்து உழைப்போம்

கொழும்பு, மே .01

எழுபத்தைந்து ஆண்டுகளாக ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து நின்று ஊழல் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்த மக்கள் அரசாங்கத்தின் கீழ், இந்த ஆண்டு தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது ஒரு வரலாற்று மைற்கல்லைக் குறிக்கிறது பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உழைக்கும் மக்களின் வியர்வை, இரத்தம் மற்றும் உயிர்த்தியாகங்கள் நிறைந்த வேதனையான வரலாற்றை முடிவுக்குக் கொண்டு வந்து, ஒரு வெற்றி ஆண்டில் ஒரு மக்கள் அரசாங்கத்தின் கீழ் 139 வது சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

எழுபத்தைந்து ஆண்டுகளாக ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து நின்று ஊழல் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்த மக்கள் அரசாங்கத்தின் கீழ், இந்த ஆண்டு தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது ஒரு வரலாற்று மைற்கல்லைக் குறிக்கிறது.

குழுவாதம், அரசியல் பக்கச்சார்புகள் மற்றும் உறவினர்களுக்குச் சலுகை அளித்தல் போன்றவற்றால் அநீதிக்குள்ளான உழைக்கும் மக்கள், 2024 ஆம் ஆண்டில் இந்த முழு அரசியல் கலாசாரத்தையும் தலைகீழாக மாற்றும் ஒரு சவாலான முடிவை எடுத்தனர். இது படுகுழிக்கு இழுத்துச் செல்லப்பட்டிருந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு துணிச்சலான நடவடிக்கையாகும்.



ஒரு மக்கள்நேய அரசாங்கமாக, மக்களின் தேவைகளை மிகச் சரியாக அடையாளம் காணவும், சீர்குலைந்த பாதையில் பயணித்துக்கொண்டிருந்த பொருளாதார, அரசியல், சமூக, கலாசார மற்றும் சட்ட கட்டமைப்பை சரியான பாதைக்கு மீட்டெடுப்பதற்காக நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம்.

பல ஆண்டுகளாக இந்த நாட்டைப் பாதித்து வரும் ஊழலையும் அநீதியையும் ஒரே இரவில் மாற்ற முடியாது என்றாலும், அரசாங்கம் படிப்படியாக எல்லாவற்றையும் நெறிப்படுத்தி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து வருகிறது.

அரச, தனியார், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட அனைத்து உழைக்கும் வர்க்கத்தின் பொருளாதார சக்திகளையும் வலுப்படுத்த அரசாங்கம் ஒரு முறையான வேலைத்திட்டத்தைத் தயாரித்துள்ளதுடன், நாட்டை தன்னிறைவு பெறச் செய்வதில் முன்னணியில் இருக்கும் விவசாய சமூகத்தை வலுப்படுத்தவும் தயாராக உள்ளது.

மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் உரிமைகளைப்பாதுகாக்கும்அதே வேளையில், மிகவும்ஸ்திரமான மற்றும் நம்பகமான எதிர்காலத்தை அடைவதற்கு நாம் ஒன்றிணைந்து நம்மை அர்ப்பணிக்க வேண்டிய ஒரு காலகட்டத்தை நாம் கடந்து செல்கிறோம்.

நாம் வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாத்து, நாட்டைக் கட்டியெழுப்ப உறுதியுடன் ஒன்றிணைந்து உழைப்போம் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்

கொழும்பு, மே .01

இலங்கையின் உழைக்கும் மக்கள் உட்பட பொது மக்கள், இந்த முறை இந்நாட்டின் ஊழல் மிக்க, சிறப்புரிமை அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள்நேய ஆட்சியின் கீழ், நாடும் சமூகமும் ஆழமான, சாதகமான மாற்றத்துடன் சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1886 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஹேமார்க்கெட் சதுக்கத்தில், 08 மணிநேர வேலை நேரத்தைக் கோரி போராட்டம் நடத்தியபோது இடம்பெற்ற அடக்குமுறை துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் இரத்தம் சிந்திய தொழிலாளர்களை நினைவுகூறும் வகையில், 1889 ஆம் ஆண்டு கூடிய இரண்டாவது கம்யூனிஸ சர்வதேசம், அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 01ஆம் திகதியை சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்த முடிவு செய்தது.

இலங்கையின் உழைக்கும் மக்கள் உட்பட பொது மக்கள், இந்த முறை இந்நாட்டின் ஊழல் மிக்க, சிறப்புரிமை அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள்நேய ஆட்சியின் கீழ், நாடும் சமூகமும் ஆழமான, சாதமான மாற்றத்துடன் சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது.

ஒரு சில குடும்பங்கள் மற்றும் பரம்பரைகளால் 76 ஆண்டுகாலமாக மேற்கொள்ளப்பட்ட ஊழல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்நாட்டின் அரசியலில் குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிக்கும் வகையில், கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இன, மத வேறுபாடின்றி இந்நாட்டின் அனைத்து மக்களும் செயல்பட்டனர்.

அந்த மக்கள் ஆணையின் அபிலாஷைகளை உணர்ந்து, நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியான திருப்பத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி செயலாற்றுகிறது. ஊழல் நிறைந்த, சிறப்புரிமை அரசியல் முறைமையால் பாதாலத்திற்குள் தள்ளப்பட்ட இந்நாட்டின் பொருளாதாரத்தை, மீட்டெடுத்து நிலையான ஆரம்பத்தை ஏற்படுத்துவதில் தற்போது நாம் வெற்றி பெற்றுள்ளோம். இதன் தெளிவான அறிகுறிகள் இப்போது அனைவருக்கும் தெரிகின்றன.

அரசாங்கத்தின் முதல் வரவுசெலவுத்திட்டத்திலேயே வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தமை உட்பட விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும்



மாணவர்கள் மாத்திரமன்றி, உற்பத்தியாளர்கள், சிறிய வர்த்தகர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவர்கள் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினர்களுக்கும் நன்மைகளை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று, தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களின் குடியுரிமை உரிமைகளை உறுதி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

நாளாந்தம் மாறிவரும் உற்பத்தி அற்றலுக்கு ஏற்ப நாம் அனுபவிக்கும் உரிமைகளில் ஒரு புதிய அத்தியாயத்தின் அவசியத்தை நாங்கள் காண்கிறோம். 1948 மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலில் இல்லாத டிஜிட்டல் பிரவேச உரிமைகள், சுற்றுச்சூழல் உரிமைகள் உள்ளிட்ட மாறிவரும் அரசியல் கட்டமைப்புகளின் தோற்றம் மற்றும் உலக அமைதியை அடிப்படையாகக் கொண்ட புதிய அபிவிருத்தித் தேவைகளுக்கமைய உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை இன்றைய சமூக கோருகிறது. இது குறித்த புரிதலுடன், தலையீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை சர்வதேச தொழிலாளர் தினமான இந்த சந்தர்ப்பத்தில், நாம் மீண்டும் நினைவூட்டுகிறோம்.

சர்வதேச புவிசார் அரசியல் மாற்றங்கள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்த நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்து, ஊழல் நிறைந்த சிறப்புரிமை அரசியலால் அழிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி "வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை" உருவாக்க சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து போராட இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கு அழைப்பு விடுப்பதுடன் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்திற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அரசாங்கம் நாட்டின் இறையாண்மையை காட்டிக் கொடுத்துள்ளது

அரசாங்கம் நாட்டின் இறையாண்மையை காட்டிக் கொடுத்து விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது முன்னிலை சோசலிச கட்சி கல்வி பிரிவு செயலாளர் புபுது ஜாகொட இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்திற்குள் இந்திய போர்க்கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் தொழிற்சாலை ஒன்று தொடங்குவதற்கு ஆயத்தமாகி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தங்களை அமைச்சரவை அமைச்சர்கள் கூட கண்டதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு தனிப்பட்ட ரீதியில் தெரிந்த அமைச்சர்கள் பலர் இந்த விடயத்தை உறுதி செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்தியாவுடன் ஏழு ஒப்பந்தங்களை கைச்சாதிட்டு உள்ளதாக அறிவித்தபோதிலும் இந்திய ஊடகங்கள் 10 ஒப்பந்தங்கள் காய்ச் சாத்திடப்பட்டதாக தெரிவித்துள்ளன. இந்திய போர் ஆயுத உற்பத்திசாலை, போர் களஞ்சியசாலை என்பவற்றை இலங்கையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய பாதுகாப்பு செயலாளர் அந்நாட்டு ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார் என புபுது ஜாகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தகவல்கள் பொய்யாக இருந்தால் அரசாங்கம் உடனடியாக தலையீடு செய்து சரியான தகவல்களை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையான நிலைமைகளை அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்திய அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளராக செயல்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த உடன்படிக்கைகளினால் பிராந்திய வலயத்தில் இலங்கை பாரிய போர் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவும், சுதந்திரத்தின் பின்னர் எந்த ஒரு அரசாங்கமும் இலங்கையின் இறையாண்மையை இவ்வாறு காட்டிக் கொடுத்ததில்லை என புபுது ஜாகொட குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ)

# விசா விண்ணப்பதாரர்களுக்கு அமெரிக்க தூதரகம் விசேட அறிவிப்பு

கொழும்பு, மே .01

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் மே 5, 2025 முதல் அனைத்து விசா விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு புதிய அறிவிப்பு விடுத்துள்ளது.

இதன்படி விண்ணப்பதாரர்கள் தங்கள் னுளு-160 விசா விண்ணப்பப்படிவத்தில்உள்ள பார்கோட் எண்(மயசஉழனந ரெஅடிநச) ("யுயு" என்று தொடங்கும்) தங்கள் விசா நேர்காணல் சந்திப்பை திட்டமிடப் பயன்படுத்தப்படும் எண்ணுடன் சரியாகப் பொருந்துவதை உறுதி செய்ய வேண்டும் என கோரியுள்ளது.

பார்கோட் எண்கள் பொருந்தவில்லை என்றால், விண்ணப்பதாரர்கள் தங்கள் திட்டமிடப்பட்ட நேர்காணலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அமெரிக்க தூதரகம் கூறியுள்ளது.

மேலும், சரியான DS-160 படிவத்துடன் புதிய சந்திப்பை முன்பதிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தாமதங்களைத் தவிர்க்க அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் தகவல்களை இருமுறை சரிபார்க்குமாறு தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)

# தமிழகத்தில் நடப்பது சாமானியர்கள் ஆட்சி மே தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு






"உழைப்பால் உலகை உயர்த்தும் உழைப்பாளர்களுக்கு வாழ்த்துகள். தமிழகத்தில் சாமானிய மக்களுக்கான ஆட்சி நடக்கிறது" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த மே தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: குருதியை வியர்வையாக்கி உழைப்பால் உலகை உயர்த்தும் உழைப்பாளர்களுக்கு வாழ்த்துகள். தி.மு.க., அரசு தொழிலாளர்கள் நலன் காக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தொழிலாளர் வளர்ச்சிக்கும் இலக்கு வைத்து தி.மு.க., அரசு செயல்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் உழைப்பாளர்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்காக ரூ.2,464 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு உள்ளன. தொழிலாளர்கள் பிரச்னைகளை, பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என அறிவுறுத்துவேன். உழைக்கும் தொழிலாளர்களுக்காக என்றைக்கும் தி.மு.க., அரசு துணை நிற்கும்.

உங்களுக்காக உழைக்கும் தி.மு.க., அரசுக்கு தொழிலாளர்கள் ஆதரவாக இருக்க வேண்டும். எந்தவொரு ஒப்பந்தங்கள் கையெழுத்தானாலும், எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும் என முதலில் கேட்பேன். தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் சாமானிய மக்களுக்கான ஆட்சி நடக்கிறது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

உழைப்பும் அர்ப்பணிப்புமே நம் நாட்டைக் கட்டமைக்கிறது. உழைப்பே உயர்வு தரும் மனநிறைவு தரும் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு, தளர்வறியா உழைப்பின் மூலம் நம் நாட்டின் பெருமையை உயர்த்தி வரும் தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும், 'மே' தின நல்வாழ்த்துகள்.

தொழிலாளர்களின் உரிமையையும், சிறப்பையும், தியாகத்தையும் குறிக்கும் உழைப்பாளர் தினமான இன்று, நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரின் கடும் உழைப்புக்கான பலன்கள் நிறைவாகக் கிடைத்திடவும், நல் ஆரோக்கியத்துடன் அனைவரின் வாழ்வு சிறந்திடவும் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

வாழ்க்கைக்கு அழகு சேர்ப்பது சொல் அல்ல செயல் என்பதை உணர்ந்து, உழைத்து உயர்வதில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த மே தின வாழ்த்துகள்.

ஓய்வறியா உழைப்பினை முதலீடாக்கி, உதிரத்தை உரமாக்கி, உறுதியை, ஒற்றுமையைப் படிக்கற்களாக்கி எங்கள் வலிமைஎனஎடுத்துக்காட்டிஎடுத்த பணியை முடித்துக் காட்டி உலகிற்கு அச்சாணியாகத் திகழும் தொழிலாளர்களுக்கு எந்நாளும் உறுதுணையாய் நிற்போம்!

உழைப்பாளர் உரிமை காப்போம்! இந்த மே தினத்தில் உழைப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

உலக தொழிலாளர் தினத்தை ஒட்டி, சென்னை மே தினப் பூங்காவில் உள்ள நினைவுச் சின்னத்திற்கு மலர் வளையம் வைத்து முதல்வர் ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். (ஐ)

# 100 நாள் வேலைத் திட்டம் தமிழகத்திற்கு 2,999 கோடியை விடுவித்தது மத்திய அரசு



கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்த, 100 நாள் வேலை அளிக்கும் திட்டத்தை, 2005ல் அப்போதைய காங்கிரஸ் அரசு கொண்டு வந்தது. தமிழகத்தில், 2008 - 09ம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு, 5 கி.மீ., சுற்றளவுக்குள், ஓராண்டில் 100 நாட்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

மேலே பாம்பு,கீழே நரிகள் குதித்தால் அகழி, ஓடினால் தடுப்புச்சுவர் தடைகளை தாண்டி சாதித்ததாக முதல்வர் பெருமிதம்

நாடு முழுதும், 740 மாவட்டங்களில், 13.42 கோடி பேர் பயனாளிகளாக உள்ளனர். இந்த திட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு, 4,034 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவிக்காமல் நிறுத்தி வைத்து உள்ளது என தமிழக அரசு குற்றம் சாட்டி இருந்தது. இதற்கு தி.மு.க., எம்.பி.,க்கள் பார்லிமென்டில் எதிர்ப்பு தெரிவித்தனர். இது தொடர்பாக ஆர்ப்பாட்டமும் நடந்துது.

இந்நிலையில், 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழகத்திற்கான ரூ.2,999 கோடியை மத்திய அரசு விடுவித்தது. இந்த திட்டத்தில் நிலுவையில் இருந்த ரூ.4,034 கோடியை விடுவிக்க வேண்டும் என தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், ரூ.2,999 கோடி மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. (ஐ)



# எல்லை கடந்தால் நடவடிக்கை: தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம்

சட்டசபையில், ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அமைச்சர்களும், தங்கள் துறை சார்ந்த திட்டங்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டனர். நன்மைகள் தரும் அறிவிப்புகளை தொடர்ந்து வெளியிட்டதுடன், மத்திய அரசின் வக்ப் சட்டத் திருத்தம் போன்ற தீமைகளை, தடுக்கும்வகையிலான, தீர்மானங்களையும்நிறைவேற்றி உள்ளோம். கூட்டத்தொடர் நிறைவடைந்த நாளில், எதிர்க்கட்சி தலைவர் அவைக்கு வராததால், எதிர்க்கட்சி துணைத் தலைவர் உள்ளிட்ட எம்.எல்.ஏ.,க்களுக்கும், கூட்டணி கட்சி எம்.எல்.ஏ.,க்களுக்கும், கை குலுக்கி நன்றி தெரிவித்தேன். நாம் நாகரிகமாகத்தான் நடந்து கொள்கிறோம். நம்மில் யாரேனும் அநாகரிகத்தின் எல்லையை கடந்தால், நடவடிக்கை எடுக்கவும் தயங்குவதில்லை. தமிழகத்தில், தி.மு.க., அரசு சாதிக்காத திட்டங்கள் கிடையாது. இதை தொண்டர்கள் உணர்ந்திருப்பதுபோல, இப்போது பொதுமக்களும் உணர்ந்துள்ளனர். தி.மு.க., என்பது தமிழகத்தின் நலனை மட்டுமின்றி, இந்தியாவின் ஜனநாயகத்தையும் காக்கின்ற கட்சி என்பதை எதிரிகளின் மனசாட்சியும் சொல்லும். தமிழகம் போராடும் தமிழகம் வெல்லும். தி.மு.க.,வே மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# சீமான் தலை இருக்காது: வலைதளத்தில் மிரட்டல்



நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு கொலை மிரட்டல் விடுத்து, 'இன்ஸ்டாகிராம்' சமூகவலைதளத்தில் பதிவிட்டவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், நேற்று புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்தி அளித்த புகாரில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 28ம் தேதி, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சந்தோஷ் என்பவர், அவரது இன்ஸ்டாகிராமில் ஒன்றை பதிவு செய்துள்ளார்.

அதில் நா.த.க., தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் தலை விரைவில் துண்டாக்கப்படும் அவரது பதவிக்கு போட்டி ஏற்படும். அனைத்து கட்சி தலைவர்களும் இரங்கல் செய்தி தெரிவிப்பார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நா.த.க., துவங்கிய நாள் முதல் இன்று வரை தெலுங்கு மக்கள் குறித்தோ, மற்ற எந்த தேசிய இன மக்கள் குறித்தோ இழிவாகவோ, அவதூறாகவோ பேசியது கிடையாது.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் பதிவிட்ட சந்தோஷ் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த புகாரில் கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் போலீசார் விசாரிக்கின்றனர். (ஐ)

# இந்தியாவின் முதல் இஸ்லாமிய அரசி!



'வலிமையான அமைப்போடு, ஆண்மகனைப்போல குதிரையேறி, முகத்தை பர்தாவினால் மூடாமல், கைகளில் வில்லும் அம்பும் ஏந்திய அவளைக் கண்டேன்' என்கிறார் பயணி இபின் பதூதா.

அவள் கி.பி 1236-ல் டெல்லி அரியணை ஏறிய முதலும் இறுதியுமான பெண். மலிகா ஹிந்துஸ்தான்-ரசியா பின் இல்துமிஷ்!

அடிமையாக இருந்து, தன் வீரத்தாலும், புத்தி சாதுர்யத்தாலும் டெல்லி சுல்தான் ஆன குத்புதின் ஐபக்கின் மகன் இல்துமிஷின் மகளான ரசியா சுல்தான், அரியணை ஏறியதே ஒரு சுவாரஸ்யமான கதைதான். ஹஇல்து மிஷின் வழித்தோன்றல்களில் சிறந்தவர் ரசியா. அவர் இருபது மகன்களுக்குச் சமம் என்று எண்ணினார் இல்துமிஷ்' என்கிறார் பாரசீக வரலாற்றாளர் ஃபிரிஷ்தா. தந்தை இல்துமிஷின் மரணத்துக்குப் பின் ரசியாவின் சிற்றன்னை மகனான ஃபிரூஸ் தன் அன்னையின் உதவியுடன் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தான். சுல்தானின் ஆசை அவர் மகளை ஆட்சியில் அமர்த்துவதே என்பதை அறிந்தும், ஃபிரூஸ/க்குத் தங்கள் ஆதரவை அளித்தனர் அமீர்கள். காரணம், ரசியா ஒரு பெண் என்பது மட்டுமே!

புத்திசாலியான ரசியா, முறையிடுவதற்காக மக்கள் அணியும்சிவப்புநிற அங்கியை அணிந்துகொண்டு, நேராக மக்களிடமே சென்றாள். படைகளிடமும் மக்களிடமும் வீர உரை ஒன்றை நிகழ்த்தினாள். அவளது பேச்சினால் வசீகரிக்கப்பட்ட டெல்லி படைகள், அரண்மனையை முற்றுகையிட்டு, ஃபிரூஸைத் தோற்கடித்து, அவனையும் அவன் தாயையும் கொன்றன. கம்பீரமாக, அதே சிவப்பு உடையோடு அரியணை ஏறினாள் ரசியா. ஹபர்தா முறையைப் பின்பற்றி, முகத்தை யாருக்கும் காட்டாமல் ஆட்சி செய்வார், நாம் குள்ளநரித்தனமாக ஆட்சியைப் பிடித்துக்கொள்ளலாம்' என்று எண்ணிய அமீர்களுக்குக் கடும் அதிர்ச்சி தந்தார் ரசியா. பர்தா முறையைப் பின்பற்றாமல், ஆண்களுடன் அரசவையில் வாதம்செய்து, ஆணைகள் பிறப்பித்து, சிங்கம்போல வலம் வந்தாள். படைகளை வழிநடத்தினாள். நஸ்ரியா பல்கலைக்கழகத்தில் கலை, அறிவியல், வானியல், கணிதம் என பல பிரிவுகளை நிறுவினாள். 'வல்லமைமிக்க சுல்தான்' என்று அச்சிடப்பட்ட செப்பு மற்றும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டாள்.

ஓர் அடிமையின் வம்சத்தினள், அதிலும் பெண், தங்களை ஆள்வதா என்று பொருமிய அமைச்சர்களும், தளபதிகளும், மதவாதிகளும், பதிந்தாவின் ஆளுநரும் ரசியாவின் சிறுவயது நண்பனுமான மாலிக் அல் துனியாவுக்கு, 'அரசிக்கும் அவளது குதிரைகளைப் பராமரித்துவந்த அடிமையான யாக்கூத்துக்கும் இடையே காதல்' என்றொரு கதையைச் சொல்லியனுப்பினர். அவள் மீது காதல்கொண்டிருந்த அல் துனியா, கலகம் செய்தான். கலகத்தை அடக்க சிறுபடையுடன் ரசியா, பதிந்தாவை நோக்கிக் கிளம்பியதும், யாக்கூத் கொல்லப்பட்டான். துரதிர்ஷ்டவசமாக, அல் துனியாவிடம் தோற்று, அவனால் கிலா முபாரக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டாள் ரசியா. டெல்லி, அவளது சிற்றன்னை மகன் பஹ்ரம் வசம் வந்தது.

அல் துனியாவிட மிருந்து தப்பிக்க வேறு வழி இல்லாததால், அவனை மணக்கச் சம்மதித்தாள் ரசியா. இருவரும்1240 ஆம்ஆண்டு திருமணம்செய்துகொண்டு, டெல்லியைக் கைப்பற்ற படை நடத்திச் சென்றனர். வழியில், கொள்ளையருக்கு அஞ்சி படைகள் சிதறியதால், கைத்தல் என்ற இடத்தில், இருவரும் கொள்ளையரிடம் சிக்கி மரணம் அடைந்தனர். ரசியாவுக்கு அப்போது வயது 35. ரசியா பேகத்தின் கல்லறைகள் கைத்தல், டோங்க் மற்றும் பழைய டெல்லியின் புல்புலிகானா என மூன்று இடங்களில் உள்ளன (உடல் அடிக்கடி மாற்றப்பட்டிருக்க வேண்டும்).

நான்கே ஆண்டுகள் ஆட்சி புரிந்தாலும், 'டெல்லியின் தலை சிறந்த பெண் ஆட்சியாளர்' என்று தன்னை நிரூபித்துச்சென்றார் ரசியா. பெண் வெற்றி பெற மதமோ, உடையோ தடை இல்லை என்பதை 800 ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு வழிகாட்டிச் சென்றிருக்கிறார் இந்த முதல் பேகம்.

**ஓர் அடிமையின் வம்சத்தினள், அதிலும் பெண், தங்களை ஆள்வதா என்று பொருமிய அமைச்சர்களும், தளபதிகளும், மதவாதிகளும், பதிந்தாவின் ஆளுநரும் ரசியாவின் சிறுவயது நண்பனுமான மாலிக் அல் துனியாவுக்கு, 'அரசிக்கும் அவளது குதிரைகளைப் பராமரித்துவந்த அடிமையான யாக்கூத்துக்கும் இடையே காதல்' என்றொரு கதையைச் சொல்லியனுப்பினர். அவள்மீது காதல் கொண்டிருந்த அல் துனியா, கலகம் செய்தான்.**



# ஜெருசலேம் அருகே காட்டுத் தீ: இஸ்ரேல் தேசிய அவசர நிலை அறிவிப்பு



ஜெருசலேம் அருகே காட்டுத்தீ பரவியதால் இஸ்ரேல் அரசு தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளது.

கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக தீ விரைவாக பரவியது. ஜெருசலேம் அருகே காட்டுத் தீ பற்றியதில், பல கிராமங்கள் அபாயத்தில் உள்ளன.

ஏராளமான தீயணைப்பு விமானங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் தீயை அடக்க முயற்சிக்கின்றனர். தீ விபத்தில் சிக்கிய 12 பேருக்கு காயம் ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் 10 ஆண்டுகளில் மிக மோசமான தீ விபத்தாக இந்த சம்பவம் அறியப்பட்டுள்ளது. வீடுகள் மற்றும் காடுகள் பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, மேற்கு காற்று புறநகர்ப் பகுதிகளுக்கு நகரத்திற்குள் கூட கூட தீயை எளிதில் தள்ளும், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை வெளியிட்டுள்ளார்.

கிரீஸ், சைப்ரஸ், குரோஷியா, இத்தாலி மற்றும் பல்கேரியா உள்ளிட்ட நாடுகளை இஸ்ரேல் உதவிக்காக அணுகியுள்ளது.

(ஐ)

# மிகப்பெரிய போர்க்கப்பலில் ஏவுகணை சோதனை நடத்தியது வடகொரியா



மிகப்பெரிய போர்க்கப்பலை உருவாக்கி அதிலிருந்து முதல் முறையாக ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ளது செயற்கை கோள் படங்கள் வாயிலாக தெரியவந்துளளது. வட கொரியா அதிபராக கிம்ஜோங் உன் உள்ளார். இவர் அவ்வப்போது ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறார் ,.

இந்நிலையில் சமீபத்தில் வட கொரியாவின் கடற்படை பலத்தை வலுப்படுத்திட நாட்டின் மேற்கு கடற்கரையில் ஒரு கப்பல் கட்டும் தளத்தில் ஒரு பெரிய கப்பல் உருவாகி வருவது செயற்கை கோள் புகைபடங்கள் வாயிலாக தெரியவந்துள்ளது. தலைநகர் பியோங்யாங்கின் தென்மேற்கே 60 கி.மீ. தொலைவில் நம்போ கப்பல் கட்டும் தளத்தில் அந்த பெரிய போர்க்கப்பல் தண்ணீரில் மிதப்பது தெளிவாகத் தெரிகிறது. நேற்று இக்கப்பலிலிருந்து ஏவுகணைகளைவீசி வெற்றி கரமாக சோதனை நடத்தியது. அப்போது அதிபர் கிம்ஜோங் உன் பார்வையிட்டார். இந்த போர்க்கப்பல் தற்போதைய கடற்படையில் உள்ள எந்தவொரு கப்பலின் அளவையும் விட இரண்டு மடங்கு பெரியதாக இருக்கலாம் என்றும், கருதப்படுகிறது. இந்த போர்க்கப்பலின் நீளம் சுமார் 140 மீட்டர் (459 அடி) இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளனர். (ஐ)

# ரஷ்யா வெற்றி தின கொண்டாட்டம்: பிரதமர் மோடி பங்கேற்கவில்லை

ரஷ்யாவின் வெற்றி தின கொண்டாட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்க மாட்டார் என அந்நாடு உறுதி செய்துள்ளது.

இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியின் நாஜிப்படையை வீழ்த்தி வெற்றி பெற்றதை ரஷ்யா ஒவ்வொரு ஆண்டும் மே 9 ம் தேதி மாஸ்கோவில் கொண்டாடி வருகிறது. அன்றைய தினம் பிரம்மாண்ட அணிவகுப்பு மற்றும் ரஷ்யாவின் பெருமையை பறைசாற்றும் வகையில் நிகழ்ச்சிகள் நடக்கும்.

இந்தாண்டு 80வது ஆண்டு வெற்றி கொண்டாட்டத்தில் பங்கேற்கும்படி சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் பிரதமர் மோடிக்கு ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு விடுத்து இருந்தார். இதில் பங்கேற்பது குறித்து உரிய நேரத்தில் முடிவு எடுக்கப்படும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியிருந்தது.

இந்நிலையில், மே 9 ம் தேதி நடக்கும் இந்த விழாவில் பிரதமர் மோடி பங்கேற்க மாட்டார் என ரஷ்யா அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் உறுதி செய்து உள்ளார்.

இந்நிலையில், இந்தியா சார்பில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்பார் என தகவல் வெளியாகி உள்ளது. (ஐ)



# வர்த்தகப் போரில் சீனா அதிகமாக பாதிக்கப்படும் அதிபர் டிரம்ப் கணிப்பு

''வர்த்தகப் போரில் சீனா அதிகமாக பாதிக்கப்படும்'' என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவி ஏற்ற போதே தங்களுக்கு வரி விதிக்கும் நாடுகளுக்கு அதே அளவு வரி விதிக்கப்படும் என்று எச்சரித்தார். அடுத்தடுத்து சீனாவுக்கு வரி மேல் வரி போட்டார். இதையடுத்து பதிலுக்கு வரி சீனாவும் வரி விதித்தது. சீன பொருட்களுக்கு இறக்குமதி வரியை 245 சதவீதமாக உயர்த்துவதாக டிரம்ப் அறிவித்தார். இது இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகப் போரை அதிகரித்தது.

இந்நிலையில், ''வர்த்தகப் போரில் சீனா அதிகமாக பாதிக்கப்படும்'' என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். இது குறித்து டிரம்ப் கூறியதாவது: பொருளாதாரத்தில் மந்த நிலை நிலவுகிறது. இதனால் வரி விதிப்பது அவசியம் ஆகிறது. பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் அதிபர் ஜோ பைடன் தான் காரணம். நமது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். இதற்கு சிறுது நேரம் ஆகும்.

அமெரிக்கா சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை சார்ந்து இல்லை. அமெரிக்க குழந்தைகளுக்கு 30 பொம்மைகளுக்கு பதிலாக இரண்டு பொம்மைகள் கிடைக்கக் கூடும். இரண்டு பொம்மைகளும் வழக்கத்தை விட இரண்டு டாலர்கள் அதிகமாக இருக்கலாம். ஆனால், வர்த்தகப் போரில் சீனா அதிகமாக பாதிக்கப்படும். இவ்வாறு டிரம்ப் கூறினார்.

(ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றது. முற்பகல் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமான பேரணி நகர் பகுதி ஊடாகப் பயணித்து யாழ். பொது நூலகம் முன்பாக நிறைவு பெற்றது.

இந்தப் பேரணியில், "தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி", "அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்கு", "மலையகத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்கு!", "கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு", "விவசாயிகள் எதிர்நோக்கும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு" உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று தம்மைப் பொறுப்பெடுக்க வேண்டிய நிலையில் அந்த நிறுவனம் தம்மை உரிய முறையில் பொறுப்பெடுக்கவில்லை, உடனடியாக அந்த நிறுவனம் தம்மைப் பொறுப்பெடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் போராட்டம் காரணமாக நோயாளர்களைப் பார்வையிட வந்தவர்கள் கட்டுப்பாடுகள் இன்றி வைத்தியசாலை விடுதிகளுக்குச் சென்றதனால் நோயாளிகள் அசௌகரியங்களுக்குள்ளாகினர். நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதிலும் நெருக்கடி நிலைமை காணப்பட்டது.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்தக் கூட்டம் தொடர்ந்து கட்சியின் முக்கியஸ்தர்களின் உரைகளுடன் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவடைந்தது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 40.7...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மானத ஜெகம்பத்தால் யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபனிடம் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் இன்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பதில் செயலர் கூறுகையில்,

"வலிகாமம் வடக்கு, வயாவிளானில் 20 ஏக்கர் காணிகளும், மாங்கொல்லை பகுதியில் 15 ஏக்கர் காணிகளும், வடமராட்சி - கற்கோவளம் பகுதியில் 5.7 ஏக்கர் காணிகளுமாக சுமார் 40.7 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து தெல்லிப்பளை ஜே/233 பகுதியில் 47 குடும்பங்களும், வயாவிளான் பகுதியில் 55 குடும்பங்களும் தமது பூர்வீக நிலங்களுக்குச் செல்லவுள்ளனர்

இதேவேளை, குறித்த காணிகளில் வெடிபொருட்கள் அபாயம் தொடர்பில் ஆராய்வு செய்யப்பட்டு அதன் பின்னர் மக்கள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இதேவேளை, மேலும் சில காணிகளும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளன." - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திருமதி. சி.சுதீஸ்னர், பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என அநுர அரசு உறுதியளித்திருந்தது. ஆனால், தேர்தல் முடிந்த பின்னர் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியவர்கள், இன்று மக்களை ஏமாற்றுகின்றனர்.

எனவே, இந்த அரசுக்குச் சிவப்பு எச்சரிக்கையை விடுப்பதற்காக, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

மக்களை எல்லா வழிகளிலும் ஏமாற்றிவரும் இந்த அரசுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாடம் கற்பிக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு உப்பைக்கூடப் பெற்றுக்கொடுக்க முடியாதவர்களே ஆட்சிப்பீடத்தில் உள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு அமுலில் இல்லை. பாதாளக் குழுக்கள் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளன. வீட்டுக்குள்ளும், நடுத்தெருவிலும் கொலைகள் இடம்பெறுகின்றன. நீதிமன்றத்துக்குள்கூட துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது. காட்டாட்சியே நாட்டில் நிலவுகின்றது." - என்றார்.

# யாழில் நிலவும் அதீத வெப்பம்: நேற்றும் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 01

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பமான காலநிலையால் நேற்று புதன்கிழமை வீதியில் பயணித்துக் கொண்டிருந்தவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி கலியுகவரதன் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மதிய நேரம் வீதியில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மயங்கி வீழ்ந்துள்ளார். அவரை வீதியால் சென்றவர்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர். மரண விசாரணையின்போது, வெப்பத்தால் ஏற்பட்ட பாதிப்பால் மயக்கம் ஏற்பட்ட நிலையில் மரணம் சம்பவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் காலை உணவை அருந்தாது, வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றார் என்று வீட்டார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்த திங்கட்கிழமை இணுவில் பகுதியில் உள்ள தோட்ட வெளியில் பயணித்துக்கொண்டிருந்தவர் வெப்பத்தால் ஏற்பட்ட பாதிப்பால் மயங்கி வீழ்ந்து உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# பகிடி வதையால் அவமானம் தாங்க முடியாமல் உயிர் மாய்த்த சப்ரகமுவ பல்கலை மாணவன்!

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் பகிடி வதையால் அவமானம் தாங்க முடியாமல் விபரீத முடிவை எடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் 23 வயதுடைய சரித் தில்ஷான் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கடந்த 27ஆம் திகதி அன்று நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்திற்குப் பின்னர், அவர் 28ஆம் திகதி கம்பளை, இஹலகமவில் உள்ள தனது வீட்டிற்கு சரித் தில்ஷான் திரும்பியுள்ளார்.

பின்னர் ஏப்ரல் 29 ஆம் திகதி மாலை, தனது வீட்டின் பின்புறம் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது குறித்த மாணவன் பகிடி வதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன் போது அவருக்கு ஏற்பட்ட தாங்க முடியாத அவமானம் காரணமாகவே தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்ததாக அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களால் தனது மகன் பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு ஆளானதாக சரித்தின் தந்தை குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பிரதான பாதுகாப்பு அதிகாரி இடமாற்றம்!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் அசோக ஆரியவன்ச, உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி அவர் இன்று (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர் அசோக ஆரியவன்ச, ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்புப் பிரிவில் 23 வருடங்கள் பணியாற்றியுள்ளதோடு, அவரது பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரியாகவும் 15 வருடங்கள் பணியாற்றி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உயிர் மாய்த்த சப்ரகமுவ பல்கலை மாணவன்– கல்வி அமைச்சின் அதிரடி நடவடிக்கை!

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் கல்வி பயிலும் மாணவன் பகிடி வதையால் விபரீத முடிவை எடுத்து உயிர் மாய்த்துள்ளார் என்ற செய்தி நிரூபணம் ஆனால், அதற்குப் பொறுப்பான அனைத்து தரப்பினரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு இன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவர் திடீரென உயிரிழந்தமை குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும், பல்கலைக்கழக நிர்வாகமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இது தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகம் – காங்கேசன்துறை கப்பல் சேவை கட்டணம் குறைப்பு!

தமிழகம் நாகப்பட்டினம் மற்றும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கு இடையிலான கப்பல் சேவை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதன் கட்டணம் குறைக்கப்படவுள்ளதாக கப்பல் சேவையை முன்னெடுத்துள்ள சுபம் நிறுவனத்தின் தலைவர் சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம் பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் சிவகங்கை கப்பல் சேவை இயக்கப்பட்டு வருகின்றது.

அதில் சென்று வருவதற்கான கட்டணம் தற்போது 8,500 ரூபாயாக உள்ள நிலையில், அந்த கட்டணத்தை 8000 ரூபாவாக குறைக்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

அத்துடன் தற்பொழுது 10 கிலோ வரை அனுமதிக்கப்படும் இலவச லக்கேஜ், இனிமேல் 22 கிலோ வரை அனுமதிக்கப்படும் என்றும் அதில் 7 கிலோ கைப்பையும், 15 ஒரு கிலோ லக்கேஜ் இலவசமாக அனுமதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் ஜூன் முதல் வாரத்தில் 250 பேர் பயணிக்க கூடிய கப்பல் இயக்கப்பட உள்ளதாகவும், கார்கோ கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாக கப்பல் நிறுவனத் தலைவர் சுந்தர்ராஜன் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2025 வெளியிடப்பெற்றது.